**செ.வெ.எண்: 50** **நாள்: 21.07.2025**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக செயல்படும் தொட்டில் குழந்தை திட்டத்தில் காவலர் பணியிடத்திற்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிப்புரிய தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்களின் வயது வரம்பு 42 வயதிற்கு மேல் இருக்கக்கூடாது. விண்ணப்பதாரர் 8ம் வகுப்பு கல்வி தேர்ச்சி தகுதி பெற்றிருக்க வேண்டும். மாத தொகுப்பூதியமாக ரூ.4500/- வழங்கப்படும்.

மேலும் விண்ணப்பத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை கல்வி தகுதி மற்றும் முன் அனுபவ சான்று இணைப்புகளுடன் **31.07.2025 அன்று மாலை 05.00 மணிக்குள்** மாவட்ட குழந்தைகள் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் - 621704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணி தேர்வுக்குழு உறுப்பினர்களின் முடிவே இறுதியானது என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**